இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 24-12-2023

ஒருங்கிணைப்பு இல்லையா?

"எரிகிற வீட்டில் எடுத்தது வரை லாபம்" - என்று தமிழில் இருக்கும் பழமொழிக்குப் பொருத்தமானவர் ஒருவர் உண்டென்றால் அது தமிழ்நாட்டு ஆளுநர் ஆர்.என்.ரவிதான். இயற்கைப் பேரிடர் காலத்திலும் தமிழ்நாடு அரசுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தி வருகிறார். தொல்லை தரும் வகையில் செயல்பட்டு வருகிறார்.

4 ஆம் தேதி புயல் - மழை ஏற்பட்டது என்றால் 7 - 8 ஆம் தேதிக்குள் இயல்பு வாழ்க்கையை முழுமையாக வழங்கி விட்டோம். வீட்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் என்பதை நிவாரணத் தொகையாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, அதனையும் நான்கு மாவட்ட மக்கள் பெறத் தொடங்கிவிட்டார்கள். இவை அனைத்தும் தி.மு.க. அரசுக்கும், குறிப்பாக முதலமைச்சர் அவர்களுக்கும் மிகப்பெரிய நற்பெயரை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தியது. இதனை தமிழ்நாட்டு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பொறாமை, வஞ்சகக் குணம் கொண்ட அவர், 19 ஆம் தேதி ராஜ்பவனுக்கு ஒன்றிய பாதுகாப்புப் படையின் அதிகாரிகளை அழைத்து ஆலோசனை நடத்தி இருக்கிறார். எவ்வளவு வேகமாக ஆளுநர் செயல்பட்டுள்ளார் பார்த்தீர்களா?

டிசம்பர் 4 ஆம் தேதி அடித்த புயலுக்கான ஆலோசனைக் கூட்டத்தை டிசம்பர் 19ஆம் தேதி நடத்தி இருக்கிறார். ஆளுநர் ரவிக்காக, புயல் சென்னையில் காத்திருந்தால் என்ன ஆகி இருக்கும்? மக்கள் மத்தியில் நற்பெயர் எடுத்துள்ள தமிழ்நாடு அரசின் பெயரைக் கெடுக்கும் வாய்ப்பாக இந்தக் கூட்டத்தை ஆளுநர் நடத்தி இருக்கிறார். இது தொடர்பாக ஆளுநர் மாளிகை விடுத்துள்ள பத்திரிக்கைச் செய்தியானது, கெட்ட எண்ணம் கொண்டதாக அமைந்திருக்கிறது.

போதிய ஒருங்கிணைப்பு இல்லை - என்று யாரோ சொன்னதாக அந்த பத்திரிக்கைச் செய்தி சொல்கிறது. தலைநகரைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்பைப் போல தென் மாவட்டங்களிலும் பாதிப்பு ஏற்பட்ட நாளன்று **- ஒன்றிய பாதுகாப்புப் படையினரை அழைத்து இப்படி ஒரு கூட்டத்தைக் கூட்டி குழப்பத்தை ஏற்படுத்திய ஆளுநர், அந்த பாதுகாப்புப் படையினரைச் செயல்பட விடாமல் சதி செய்திருக்கிறார்.** தான் ஏதோ மாநிலத்தின் அதிபரைப் போல ஆர்.என்.ரவி நினைத்துக் கொள்கிறார்.

14.9.2023 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் இக்கூட்டம் நடைபெற்றது. வடகிழக்குப் பருவ மழையை எதிர்கொள்வது குறித்த ஆலோசனைக் கூட்டம் இது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் உயரதிகாரிகள் அனைவரும் கலந்து கொண்டார்கள். அவர்களோடு இந்திய ராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள். விமானப்படை, கடற்படை அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள். கடலோரக் காவல் படை அதிகாரிகளும் வந்திருந்தார்கள். இந்திய வானிலை ஆய்வு மைய அதிகாரிகளும், ஒன்றிய நீர்வள ஆணைய அதிகாரிகளும், தேசிய பேரிடர் மீட்புப் படை அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள். இதுதான் ஒருங்கிணைப்பு என்பது. இந்தக் கூட்டம் நடந்த தேதி 14.9.2023. அதாவது கடந்த செப்டம்பர் 14 ஆம் தேதியே ஒருங்கிணைப்புக் கூட்டம் நடத்தி விட்டது தமிழ்நாடு அரசு.

19.9.2023 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டம் நடந்த தேதியையும் கவனித்தால்தான் எவ்வளவு முன்கூட்டியே திட்டமிட்டுள்ளார்கள் என்பது தெரியும்.

இப்போது பெய்த மழை என்பது வானிலை ஆய்வு மையத்தாலேயே கணிக்க முடியாததாக இருந்தது. வரலாற்றில் இதுவரை இல்லை என்று சொல்லத்தக்க வகையில் மாபெரும் இயற்கைப் பேரிடரைச் சந்தித்தது தமிழ்நாடு.

புயல் - மழைக்கு முன்பு அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் -மழை, வெள்ளத்துக்குப் பிறகு அரசு எடுத்த நிவாரண நடவடிக்கைகளும் சேர்ந்து மாபெரும் சேதத்தைத் தவிர்த்தது. இல்லாவிட்டால் மிகப்பெரிய சேதம் ஏற்பட்டு இருக்கும்.

ஒருங்கிணைப்பு இல்லாவிட்டால் பெரும் சேதம் ஏற்பட்டு இருக்குமே? ஒருங்கிணைப்பு இல்லாவிட்டால் நூற்றுக்கணக்கான உயிரிழப்புகள்கூட ஏற்பட்டு இருக்குமே? ஒருங்கிணைந்து செயல்பட்டதால்தானே ஒன்றியக் குழுவும் தமிழ்நாடு அரசைப் பாராட்டியது!

"அதிகப்படியான தண்ணீர் தேங்கக் காரணம், கடல் மட்டம் உயர்ந்து தண்ணீரை உள்ளே விடாமல் எதிர்த்தது என்பதை நான் அறிவேன்" என்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களே, தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்களிடம் சொன்னார்களே. டெல்லியில் இருந்த பிரதமருக்குத் தெரிந்தது, கிண்டியில் இருக்கும் ஆளுநருக்குத் தெரிய வில்லை.

தென் மாவட்டக் களத்தில் 10 அமைச்சர்கள் - 10 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், ஐ.பி.எஸ். அதிகாரிகள் - 10 ஆயிரம் அரசு ஊழியர்கள்- தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையின் வீரர்கள், படகுகள், உபகரணங்கள் - 375 வீரர்கள் கொண்ட தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் 15 குழுக்கள்- 275 வீரர்கள் கொண்ட தேசிய பேரிடர் மீட்புப் படையின் 10 குழுக்கள் - கூடுதலாக தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையில் பயிற்சி பெற்ற 230பேர் - இராணுவ வீரர்கள் 168பேர் இருந்தார்களே; இவர்களை அனுப்பிவைத்ததும் முதலமைச்சர்தானே? முதலமைச்சருக்குத் தெரியாமல் 'அரூப உருவம்' அனுப்பியதாக நினைக்கிறாரா ஆளுநர்?

விமானப்படையின் 4 ஹெலிகாப்டர்கள், கடற்படையின் 2 ஹெலிகாப்டர்கள் மற்றம் கடலோரக் காவல் படையின் 2 ஹெலிகாப்டர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளன. யார் சொல்லி வந்தார்கள் இவர்கள்? முதலமைச்சர் சொல்லித் தானே?

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்குக் கூடுதல் ஹெலிகாப்டர்கள் தேவைப்படுவதால், அதிகபட்ச அளவில் ஹெலிகாப்டர்களை அனுப்பி வைக்க வேண்டும் என்று ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதி, அவரும் அனுப்பி வைத்தாரே? அதையாவது கிண்டியார் அறிவாரா?

உச்சநீதிமன்றம் இவரது உச்சந்தலையில் பலமுறை கொட்டிய பிறகும் அவர் திருந்துவதாகத் தெரியவில்லை.

இவ்வளவு நல்லெண்ணமும் அக்கறையும் இருந்திருக்குமானால், பாதிக்கப் பட்ட மக்களுக்கான நிவாரணத் தொகையை ஒன்றிய அரசிடம் இருந்து வாங்கித் தருவதில் ஆர்.என்.ரவி ஆர்வம் செலுத்த வேண்டும். அதை விட்டுவிட்டு, இயற்கைப் பேரிடர் நேரத்தில் தனது இழிசிந்தனைகளை அரங்கேற்றப் பார்க்கக்கூடாது.

●●

'உலக முதலீட்டாளர்கள் மாநாடு' முன்னேற்பாட்டுப் பணிகள்!

தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா கள ஆய்வு!

சென்னை, டிச. 24-

உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024ன் முன்னேற் பாட்டுப் பணிகளை தலை மைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கள ஆய்வு மேற்கொண் டார்.

தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வரும் 2024 ஆண்டு ஜனவரி 7 மற்றும் 8 ஆகிய நாட்களில் சென்னை யில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறவுள்ளதை முன்னிட்டு அதற்கான முன் னேற்பாட்டுப் பணிகளை நேற்று முன்தினம் (22.12.2023) கள ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது அரசு கூடுதல் தலைமைச் செய லாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், அரசு முதன்மைச் செயலா ளர்/சென்னை மெட்ரோ ரெயில் லிமிடெட் மேலாண்மை இயக்குநர் மு.ஆ. சித்திக், பொதுப்பணித் துறை அரசு முதன்மைச் செய லாளர் மரு. பி. சந்திரமோ கன், தொழில், முதலீட்டு ஊக் குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர், வி. அருண்ராய், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறு வனத் தின் மேலாண்மை இயக்குநர் சந்திப் நந்தூரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

#OurTax_OurRights.. பேரிடர் நிவாரணமாக ஒன்றிய அரசிடம் கூடுதல் நிதி கோரும் தமிழ்நாடு!

பதிவில் ட்ரெண்டிங்!

டெல்லி, டிச. 24-

எங்கள் வரிப் பணம் எங்கள் உரிமை என ஒன்றிய அரசிடம் தமிழ்நாடு மக்கள் கேள்வி கேட்டு வருகிறார் கள். மிக்ஜாம் புயல் கனமழையால் சென்னை, செங் கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து மீள்வதற்குள் அடுத்த ஒரு வாரத்திலேயே திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென் காசி மாவட்டங்களில் வரலாறு காணாத கனமழை கொட்டித் தீர்த்தது.ஒரே ஆண்டில் பெய்ய வேண்டிய மழை ஒரே நாளில் பெய்ததால் மக்களின் வாழ்வாதா ரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனிடையே மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு ரூ.6000 நிவாரண நிதி வழங்கப்பட்டு வரும் நிலையில், தூத்துக்குடி, நெல்லையில் மழை வெள் ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் ரூ.6000 வழங் கப்படும் என்றும் குமரி, தென்காசி மாவட்ட மக்க ளுக்கு ரூ.1000 வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் செய்தியாளர் கேள்விக்கு பதில் அளித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், "தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து தமிழ்நாட் டிற்குக் கூடுதல் நிதி வழங்கப்படவில்லை. தற்போது ஒன்றிய அரசு அளித்த ரூ.450 கோடி, மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு வழக்கமாக வழங்க வேண்டிய 2வது தவணையே தவிர, கூடுதல் நிதி அல்ல. தமிழ் நாடு அரசின் நிதியை செலவிட்டு மக்களுக்கு நிவார

ணம் வழங்கப்பட்டு வருகிறது."இவ்வாறு விளக்கம் அளித்தார்.ஒரு இயற்கைப் பேரிடரின் தாக்கம் மிகக் கடுமையாக இருக்கும்போது இந்த SDRF நிதி போத வில்லை என்றால், அந்த இயற்கைப் பேரிடரைக் கடும் இயற்கை பேரிடராக அறிவித்து தேசிய பேரிடர் நிவா ரண நிதியிலிருந்து (NDRF) கூடுதல் நிதி ஒதுக்கப்படும்.

ஆனால் இதுவரை இரண்டு பேரிடர்களும் கடும் பேரிடர்களாக அறிவிக்கப்படவில்லை. NDRF-ல் இருந் தும் தமிழ்நாட்டிற்கு கூடுதல் நிதி எதுவும் ஒதுக்கீடு செய் யப்படவில்லை. இந்த நிலையில், ஒன்றிய அரசின் NDRFல் இருந்து கூடுதல் நிதி ஒதுக்கீட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் பலமுறை கோரிக்கை வைத் தும் நிதியளிக்காத ஒன்றிய பாஜக அரசை கண்டித்து தமிழ்நாட்டு மக்கள் #OurTax_OurRights என்ற ஹேஷ் டேக்கில் மோடி அரசுக்கு எதிராக தங்களது கண்ட னத்தை x பதிவு - சமூகவலைதளத்தில் செய்து வரு கின்றனர்.

மாவட்ட கண்காணிப்புத் தலைவர் - செய்தித்துறைச் செயலாளர் இரா.செல்வராஜ் தலைமையில்!

நெல்லையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அடுத்தகட்ட நடவடிக்கை!

பல்வேறு துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம்!

திருநெல்வேலி, டிச.24-

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட் டரங்கில், நேற்று முன்தினம் (22.12.2023) மாவட்ட கண் காணிப்பு அலுவலர் / தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் மருத்துவர் இரா.செல்வ ராஜ் தலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகே யன் முன்னிலையில், கன மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண் டிய அடுத்த கட்ட நடவ டிக்கைகள் குறித்து பல் வேறு துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/ தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் மருத்து வர் இரா.செல்வராஜ் தெரி வித்ததாவது :-

திருநெல்வேலி மாவட் டத்தில் 17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய தினங்க ளில் கனமழை பெய்துள்ள தால் தாமிரபரணியில் நீர் வரத்து அதிகரித்து, பல் வேறு பகுதிகளில் பெய்த மழை நீரும் சேர்ந்து தாமிர பரணி ஆற்றில் வெள்ளபெ ருக்கு ஏற்பட்டு ஆற்றின் கரையோர பகுதியில் வெள் ளநீர் சூழ்ந்தது. குடியிருப்பு பகுதியில் சூழ்ந்துள்ள வெள்ளநீரை அகற்றுவ தற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வெள்ளநீர் வடிந்துள்ளது. அப்பகுதிகளில் டெங்கு காய்ச்சல் போன்ற நோய் கள் பரவாமல் இருப்பதற்கு தூய்மை பணியாளர்கள் மூலம் கிருமிநாசினி தெளிக் கப்பட்டு மருத்துவ முகாம் கள் நடத்தப்பட்டு வருகி றது. தொடர்ந்து தூய்மை பணியாளர்கள் மூலம் சுத் தப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகி றது. கால்நடை மருத்துவ முகாமில் கால்நடைகளுக்கு உரிய மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருவதை உறுதி செய்ய வேண்டும். சாலைகள் மற்றும் பாலங் கள் சீரசெய்ய விரைந்து நட வடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகிறது.

மேலும் மழை வெள்ளத் தினால் ஏற்பட்ட பயிர்பா திப்புகளை கணக்கெடுக்கும் பணியினை வேளாண்மைத் துறை மற்றும் வருவாய்த்து றையினர் இணைந்து மேற்கொண்டுள்ளனர். இப் பணியினை விரைந்து முடிக்க வேண்டும். மழையை பொறுத்து அணைகளில் நீர் மட்டத்தை 24 மணிநேர மும் கண்காணிக்க வேண் டும். மருத்துவ முகாம்கள் அனைத்து பகுதிகளிலும் நடைபெறுகிறது என்றும் தாமாக முன்வந்து பரிசோ தனை செய்துக்கொள்ள வேண்டும். மேலப்பாளை யத்திலிருந்து கருப்பந்துரை செல்லும் வழியில் உள்ள ஆற்று பாலத்தில் ஏற்பட் டுள்ள சேதத்தினை சீர்படுத்தி உடனடியாக பயன்பாட் டிற்கு கொண்டு வரவேண்டும்.

வண்ணார்பேட்டை ஆற்று பாலம் வெள்ளத்தி னால் பாதிக்கப்பட்டுள் ளதை மேற்படி பாலம் சீர் செய்திடவும் அப்பாலத்தின் வழியாக பேருந்துகள் நான்கு மற்றும் இரண்டு சக் கர வாகனங்கள் மற்றும் மினி லாரிகள் செல்ல அனு மதித்திடவும், கனரக வாக னங்கள் செல்வதற்கு தடை விதித்து காவல்துறை கண்காணித்திட வேண்டும். மேற்படி பாலம் வழியாக செல்லும் வாகனத்தின் வேகத்தினை கண்காணத்தி டவும், பாலத்தின் உறுதித் தன்மையை ஆராய்ந்திட வும் அறிவுறுத்தப்பட்டது. மேலும், பாலத்தின் வேகத் தடை அமைத்திட வேண் டும். பாளையங்கோட்டை வட்டத்தில் சீவலப்பேரி, கான்சாபுரம், தருவை மற் றும் முன்னீர்பள்ளம் ஆகிய கிராமங்கள் தாமிரபரணி ஆற்றுப்படுகையின் அருகில் உள்ள காரணத்தினால் முறையாக குடிநீர் வழங்கப் படுவதை உறுதி செய்திட வேண்டும். சீவலப்பேரி கிராமத்தில் டேங்கர் மூலம் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்திட வேண்டும். மழை யினால் நனைந்த கழிவுகள் அதிகளவில் குப்பையில் கொட்டப்படுவதால், அதனை விரைந்து அகற்றிட வேண்டும்.

பேரூராட்சிகள் மூலம், மணிமுத்தாறு, தேவர்குளம் சாலையின் இருபுறங்களும் பழுதடைந்தடைந்துள் ளதை விரைவில் சீரமைத்திட வேண்டும். கிராமப்புற பகு தியில் 47 சாலைகளில் 44 சாலைகள் தற்காலிகமாக சீர மைப்பட்டுள்ளதாகவும், இதனை முழுமையாக சீர் செய்திட பணியினை தொடர்ந்து கண்காணித்து சாலையை சரிசெய்திட வேண்டும்.

பொதுப்பணித்துறை யின் மூலம், பொதுகட்டி டங்களின் உறுதித்தன்மை யினை ஆய்வு செய்திட வேண்டும். வட்டார அள வில் 1000 மணல் மூட்டைக ளும், நெடுஞ்சாலைத்துறை மற்றும் நீர்வள ஆதார அமைப்பின் கீழ் 10,000 மூட்டைகள் கையிருப்பில் வைத்திட வேண்டும்.

நீர்வளஆதார அமைப் பின் மூலம், அணைகட்டுக ளின் நீரின் கொள்ளவிற்கு ஏற்ப உபரி நீர் திறக்கப்பட வேண்டும் என்றும், மேலும், அமலைச்செடிகள் அகற்றப்பட வேண்டும்.

திருநெல்வேலி மாவட் டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் மின்விளக்குகள் சரியாக ஒளிரூட்ட படுகிறதா என் பதை உறுதி செய்திடவும், மின்கம்பங்கள் பழுதடைந்து இருந்தால் மின்சார வாரி யத்திடம் தகவல் தெரிவித்து சரிசெய்திட வேண்டும். குடிநீர் தொட்டிகளை சுத் தப்படுத்தப்பட்டு குளோரி னேசன் இடப்பட வேண் டும் எனவும், மேலும் தொட்டிகளுக்கு மூடி போட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. பைப் லைன்கள் உடைப்பு ஏற் பட்டு நீர்கசிவு ஏற்படுவதை சரிசெய்திட வேண்டும். கிராமப்புறங்களில் 24 மணி நேரம் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டும். டேங்க் மூலமாக விநியோகம் செய் யப்படும் விபரத்திற்கான லாக் புத்தகம் பதிவு செய்து பராமரித்திட வேண்டும் எனவும், மேலும், மோட் டார் பழுதடைந்தால் மற் றும் மாற்றுதலினை உட ன டியாக செய்திட வேண்டும். மாஞ்சோலை பகுதிகளில் உள்ள பொதுமக்கள் மண் ணெண்ணை உடனடியாக விநியோகம் செய்திட வேண்டும். மேலும், மழை வெள்ளத்தினால் ஆடு, மாடு போன்ற கால்நடைகள் பாதிக்கப்பட்டதற்கு உரிய நிவாரணம் வழங்கவும் மற் றும் தண்ணீர் புகுந்து பாதிக் கப்பட்டவர்களிடம் கணக் கெடுத்து உரிய நிவாரணம் வழங்க விரைந்து கணக்கெ டுப்பு நடத்த வேண்டும் என மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/ தமிழ் வளர்ச்சி மற்றும் செய்த்துறை அரசு செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், தெரிவித் தார்.

இக்கூட்டத்தில், மாநக ராட்சி ஆணையாளர்கள் தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், (திருநெல்வேலி), வ. சிவகிருஷ்ணமூர்த்தி, (ஈரோடு), சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அர்பித் ஜெயின், சிறப்பு பணி அலு வலர் முகமது ஷபீர் ஆலம், மாவட்ட வருவாய் அலுவ லர் திருமதி.மா.சுகன்யா, மாநகர காவல் துணை ஆணையாளர் (மேற்கு) சர வணக்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சுரேஷ் மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! டி. சூசைராஜ் வரவேற்புரை!

புதுக்கோட்டையில் மாவட்ட சிறுபான்மை நல உரிமைப் பிரிவு சார்பில் கிறிஸ்துமஸ் விழா !

அமைச்சர் எஸ்.ரகுபதி நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை! கவிச்சுடர் கவிதைப்பித்தன் வாழ்த்துரை!

புதுக்கோட்டை, டிச.24-

முத்தமிழறிஞர்தமிழினத் தலைவர் கலைஞர் அவர்க ளின் நூற்றாண்டை முன் னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் சிறு பான்மை நல உரிமைப்பிரிவு சார்பில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செய லாளர் வழக்கறிஞர் கே. கே.செல்லபாண்டியன் தலை மையில் கிறிஸ்துமஸ் பெரு விழா சமய நல்லிணக்க திரு விழா கேக் வெட்டி நலத்திட்ட உதவிகள் வழங் கும் நிகழ்வு இனிதே நடை பெற்றது.

மாவட்ட அமைப்பாளர் டி.சூசைராஜ் வரவேற்புரை யில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி கேக் வெட்டி, 500க்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு நலத்திட்ட உத விகள் வழங்கி சிறப்பித்தார் கள்.

இந்நிகழ்வுகளில் கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர். கவி தைப்பித்தன், அருட்தந்தை முனைவர் அ.சவரிநாயகம் அடிகளார், தவத்திரு தயா னந்த சந்திரசேகர சுவாமிகள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்வில் மருத் துவர் வை.முத்து ராஜா எம். எல்.ஏ., நகர கழக செயலாளர் ஆ.செந்தில், மாநில தொண் டர் அணி துணைச் செயலா ளர் சுப.சரவணன், செ. அசோக்பாண்டி யன், எம். லியாக்கத் அலி, தவ.பாஞ்சா லன், மு.க.ராம கிருஷ்ணன், எட்வர்ட் சந்தோஷ், என். சாத்தையா, எம்.எம்.பாலு, பொன்னத்மோரி சூசைராஜ், அ.ரெத்தினம், மா.மணி வே லன், பழனிவேல், ஆ.ஜேம்ஸ், பொன்.பாரிவள்ளல், செந்தா மரை பாலு, எம்.ராஜா, கவி வேந்தன், சி.அரங்கநாயகம், எஸ்.வி.ஆர்.ஜெய் ஸ்டாலின், வி.ஜி.ஆர்.மணிவண்ணன், மு.கலைஞர் கருணாநிதி, ஆர்.ராமசாமி, மனிமொழி மனோகரன், கி.சுப்ரமணி யன், கவிஞர் மரிய எட்வின், பெ.தெய்வானை, கை.பழ னிச்சாமி, ஞானசேகரன், ஜானகிராமன், த.சிவக் குமார், செந்தில்குமார், காதர் கனி, எ.சேட்டு (எ) ரஹமத் துல்லா, அப்துல் வஹாப், கே.அப்துல் அலீம், ஷேக் அப் துல்லா, இக்பால் (எ) இளஞ் சேரன், எஸ்.பவுல்ராஜ், ஓ. என்.பி.அப்துல் ரஷீது, ஆர். ஜெ.அண்ணாத்துரை, பஷீர் அகமது, எஸ்.நிஜாமுதீன், எல்.ஐ.சி ரமேஷ், ஓவியா,

மாரியப்பன், ஆர்.எம். எஸ்.சத்யா, தியாகு, ரவிச் சந்திரன், க.பிரபு, பால்ராஜ், ஆரோக்கியசாமி, ராஜ ராஜன், ராஜாராம், ஆதி, பீட்டர் எட்வின் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாரம், காரையூரில், வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில், நபார்டு திட்டத்தின்கீழ், ரூ.39.55 இலட்சம் மதிப்பீட்டில், விதை சேமிப்புக் கிடங்குடன் கூடிய துணை வேளாண்மை விரிவாக்க மையக் கட்டிடத்தினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, இணை இயக்குநர் (வேளாண்மை) பெரியசாமி, செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல்துறை) செல்வம், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் அ.முத்து, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.